காரணம் அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே கடன் வழங்கும் தகுதியினை இழந்து, வாங்கிய கடனை வசதி படைத்த விவசாயி கள், காலத்திலே கட்டாத காரணத்தினால், பைனான்சியல் வையபிலிட்டினைக் கூட இழந்து இருந்தது. அந்த நிலையைக் கூட மாற்றி, தற்போது அந்த வங்கிகள் கடன் வழங்கும் தகுதியைப் பெற்று, ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கும் தகுதி யினைத் தற்போது பெற்றிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களில் பயிற்சியைப் பெறாத ஊழியர்கள் குறிப்பிட்ட ஒரு சங்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால், கூட்டுறவுப் பயிற்சிக்கு அனுப்பாமல் தனி அதிகாரி தாமதம் செய்கிறார்கள். அதைப்போக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, தனி அதிகாரிகள் அப்படி தாமதம் செய்வதாக தகவல் இல்லை. ஆனால் நான் ஏற்கனவே சொன்னதைப்போல, பல ஆண்டுகளுக்கு முன்னாலே பணியிலே அமர்த்தப்பட்டவர்கள், தகுதி இல்லாமல் அமர்த்தப்பட்டவர்களை, வீட்டுக்குக் கூட அவர்களை அனுப்பி இருக்கலாம். பல ஆண்டுகள் பணியில் இருந்து விட்டார்கள். பிள்ளைக் குட்டிகளைப் பெற்று குடும்பங்களோடு இருக்கின்ற அவர்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக அவர்களுக்குப் பயிற்சி அளித்து வேலைக்கு சேர்க்கவேண்டும் என்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. இது நடைமுறைப்படுத்தப்படும்.

தமிழ்நாடு விற்பனை இணையம் மூலம் விற்பனை செய்யப்பட்ட உரங்கள்.

*வினா எண் 70—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா:—

(அ) இந்த ஆண்டு (198) ஜூன் மாதத்தில் மத்திய அரசு உரங்களின் விலையை ஏற்றியபொழுது டான்பெட் மார்க்கெட்டிங் சொசைட்டியில் இரண்டு மூன்று முன் தினங்கள் வரையில் தனி வியாபாரிகளுக்கு விற்கப்பட்ட உரங்கள் எவ்வளவு?

(ஆ) அதனால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பு யாது?

(இ) இவ்விழப்பை தனி வியாபாரிகளிடமிருந்து வசூலிக்கும் எண்ணம் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:

(அ) மத்திய அரசு உரங்களின் விலையை 8-6-80 முதல் ஏற்றிய பொழுது தமிழ்நாடு விற்பனை இணையம் தனது சில்லரை விற்பனை நிலையங்கள் மூலம் இரண்டு மூன்று முன் தினங்கள் வரையில் தனி வியாபாரிகளுக்கு உரங்கள் எதுவும் விற்கவில்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த்:—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்ற நேரத்தில் தனி வியாபாரிகளுக்கு உரங்கள் எதுவும் விற்கப்படவில்லை என்று தெரிவித்தார்கள். ஆனால் பல இடங்களில் உர விலை ஏறியபொழுது 'பிரின்சிபல் சர்டிபிகேட்' கூட இல்லாமல் வியாபாரிகளுக்கு விற்கப்பட்டதாக புகார்கள் என்னிடம் வந்திருக்கின்றன. அதுபற்றி அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா? பிரின்சிபல் சர்டிபிகேட் இல்லாமல் அந்த வியாபாரிகளுக்கு உரங்களை வழங்கிய அதிகாரிகள் மேல் நடவடிக்கை எடுத்து, ஏற்பட்ட இழப்பை அரசு அவர்களிடமிருந்து வசூல் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. உரத்தைப் பொறுத்த வரைக்கும் தனி வியாபாரிகளுக்கு விற்க எந்த ஒரு இணையத்திற்கும் அனுமதி கிடையாது. ஆனால் இணையமே உற்பத்தி செய்கிற பாமணி உரத்தை மட்டிலும் விவசாய சங்கங்களுடைய தேவைக்கு மேல் அது இருக்கிற பொழுது வெளி மார்க்கட்டிலே விற்கலாம் என்ற நடைமுறை இருந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கிற வினா, மத்திய அரசு உரங்கள் விலையை ஏற்றியபொழுது உரங்கள் தனியார்களுக்கு விற்கப்பட்டிருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். அப்படி தனியார்களுக்கு விற்கப்படவில்லை. இருப்பினும் தவறு நடக்காமல் இல்லை. கிட்டத்தட்ட 115 கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்களைப் பொறுத்தவரைக்கும், அங்கே இந்த குறிப்பிட்ட தேதிக்கு பிறகு கூட அவர்களுடைய கையிலே அதிகமான பணம் இருந்தது என்று ஆய்விலே கண்டு பிடிக்கப்பட்டது. அதை தீர ஆய்ந்த பிறகு கிட்டத்தட்ட ஏழு சங்கங்களிலே மட்டும் இந்த தவறு செய்திருப்பதாக கண்டு பிடித்து அந்த ஏழு சங்கங்களின் மீது உள்ள தவறை புலனாய்வுத் துறைக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது பாமணி உரங்களை விற்பதற்கு 'பிரின்சிபல் சர்டிபிகேட்' தேவையில்லை என்று சொன்னார்கள். ஆனால் 'யூரியா' போன்ற மிக முக்கியமான உரங்களை இது போன்று 'பிரின்சிபல் சர்டிபிகேட்' இல்லாமல் வியாபாரிகளுக்கு விற்கப்பட்டிருப்பதாகப் புகார்ஏதாவது அரசிற்கு வந்திருக்கிறதா? அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அத்தகைய புகார் இதுகாறும் வரவில்லை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதாவது ஆதாரம் இருந்து அதைத் தருவாரானால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. இராசமாணிக்கம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இரசாயன உரங்கள் கூட்டுறவுத் துறையிலே விற்பதற்கும், தனியார் கடைகளிலே விற்பதற்கும் ஏராளமான விலை வித்தியாசம் இருக்கிறது. ஒரு மூட்டைக்கு ஐந்து ரூபாய்க்கு மேல் வித்தியாசம் இருக்கிறதே, இது என்ன காரணத்தினால் ஏற்படுகிறது? அதை குறைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, போக்குவரத்துச் செலவு சற்று அதிகமாக ஆகிற காரணத்தால் இது நேர்கிறது. தனியார் கடைகளைப் பொறுத்தவரைக்கும், விவசாயிகள் கிராமங்களிலிருந்து அவர்களுடைய சொந்த வண்டிகளை கொண்டு வந்து அருகாமையிலே இருக்கிற நகரத்துக்கு வந்து எடுத்துச் சென்றுவிடுகிறார்கள். 'டிரான்ஸ் போர்ட்டேஷன்' செலவு அவர்களுக்கு இருப்பதில்லை. தனியார் கடைகள் அந்த அளவிற்கு விலையை குறைத்து கொடுக்கிறார்கள். ஆனால் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரைக்கும் விநியோகிக்கப்படுகிற உரங்களை அந்த கிராமங்களிலே, பட்டிக்காட்டிலே இருக்கிற சங்கங்களிலேயே அந்த உரத்தைத் தருகிற காரணத்தால் அதற்கான கூடுதல் போக்குவரத்து செலவு ஆகிறது. இருந்தாலும், தற்போது கிட்டத்தட்ட மூட்டைக்கு ரூபாய் மூன்றிலிருந்து நாலு வரை உர விலையை குறைக்க வேண்டுமென்று அண்மையில் அரசு உத்தரவிட்டிருக்கிறது. அது விவசாயிகளுக்கும் பயனுடையதாக அமைந்திருக்கிறது.

சைதாப்பேட்டையிலுள்ள ஜுடிஷியல் குற்றவியல் இரண்டாம் வகுப்பு நீதிமன்றம்.

*வினா எண். 71—திரு. பம்மல் நல்லதம்பி: மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) சைதாப்பேட்டை 2—ம் வகுப்பு ஜுடிஷியல் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில், மாஜிஸ்டிரேட் இல்லாமல், வழக்குகள் தேங்கி கிடப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அப்பதவி எப்போது நிரப்பப்படும்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) 28—4—81 அன்று சைதாப்பேட்டையில் உள்ள ஜுடிஷியல் குற்றவியல் இரண்டாம் வகுப்பு நீதி மன்றத்தில் ஒரு நடுவர் புதிதாகப் பதவி ஏற்றுள்ளார்.

TRUTH ALONE TRIUMPHS